பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 08 2026 7 15

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

- முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்தின் சுயசரிதை புத்தகத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் வெளியிடுகிறார்.

- இந்தியா வந்துள்ள Liberia நாடாளுமன்ற குழுவினருடன் டாக்டர் ஜெய்சங்கர், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

- நகராட்சிகளின் நிதி தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவை பங்குகள் பரிவர்த்தனை வாரியம் தளர்த்தியுள்ளது.

- ராஜஸ்தான், மேற்குவங்கம் உள்ளிட்ட சில மாநிலங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

முன்னாள் குடியரசுத்தலைவர் திரு. ராம்நாத் கோவிந்தின் சுயசரிதை புத்தகத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று புதுதில்லியில் வெளியிடுகிறார்.

“இந்திய குடியரசின் வெற்றி: என் வாழ்க்கை என் போராட்டங்கள்” என்ற தலைப்பிலான புத்தகத்தை வெளியிட்டு பிரதமர் உரையாற்ற உள்ளார்.

திரு. ராம்நாத் கோவிந்த் தனது வாழ்க்கைப் பயணத்தில் ஏற்பட்ட அனுபவங்கள், இளமைக் காலத்தில் செய்த சாதனைகள், பொது வாழ்வில் அவர் பங்கேற்றது, நாட்டின் குடியரசுத்தலைவராக சேவையாற்றியது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

<<<<>>>>

இந்தியா வந்துள்ள Liberia நாடாளுமன்ற குழுவினருடன் டாக்டர் ஜெய்சங்கர், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

*இந்தியா, பிரேசில், தென்னாப்பிரிக்க நாடுகளின் நிதியுதவியுடன், கற்றல் திட்டத்தின்கீழ் இந்தக் குழுவினர் புதுதில்லி வந்துள்ளனர்.*

*இந்தக் குழுவினருடனான சந்திப்பு குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள டாக்டர் ஜெய்சங்கர், பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பரிமாறிக் கொண்டதாக தெரிவித்துள்ளார்.*

*ஜன்தன் வங்கிக் கணக்குத் திட்டம், முத்ரா கடன் திட்டம், ஏழை மக்களுக்கான உணவு தானிய திட்டம், ஜல்ஜீவன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் அனுபவங்களை அந்தக் குழுவினருடன் தாம் பகிர்ந்துகொண்டதாகவும் டாக்டர் ஜெய்சங்கர் குறிப்பிட்டுள்ளார்.*

*<<<<>>>>*

*பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நகராட்சிகள் தங்களின் பங்குகள் குறித்த விவரம் மற்றும் நிதியாண்டு அறிக்கையை தாக்கல் செய்வதற்கான காலக்கெடுவை பங்குகள் பரிவர்த்தனை வாரியமான செபி தளர்த்தியுள்ளது.*

*தணிக்கை செய்யப்படாத நிதி தொடர்பான அரையாண்டு அறிக்கையை முதல் அரையாண்டு முடிவடைந்த 60 நாட்களில் தாக்கல் செய்ய வேண்டும் என்று செபி வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.*

*ஏற்கனவே முதல் அரையாண்டுக்குப் பின்னர் 45 நாட்களில் தாக்கல் செய்ய வேண்டும் என்ற நிலை இருந்தது.*

*இதேபோல் தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு நிதியறிக்கையை அந்த நகராட்சிகள் நிதியாண்டு முடிவடைந்த 90 நாட்களில் தாக்கல் செய்ய வேண்டும் என நீட்டிக்கப்பட்டுள்ளது.*

*ஏற்கனவே 60 நாட்களில் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்ற நிலை இருந்தது.*

*நகராட்சிகள் எதிர்கொள்ளும் நடைமுறை சவால்களைக் கருத்தில் கொண்டு இந்த கால நீட்டிப்பு அளிக்கப்பட்டுள்ளதாக செபி தெரிவித்துள்ளது.*

*<<<<>>>>*

*கேரள மாநிலத்தில் பெயரை கேரளம் என மாற்றுவதற்கான சட்டத் திருத்த மசோதாவை மாநிலங்களவையில் இன்று உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தாக்கல் செய்ய உள்ளார்.*

*இந்த மசோதா மக்களவையில் நேற்று நிறைவேற்றப்பட்டது.*

இதையடுத்து மாநிலங்களவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

இதேபோல் தேசிய கூட்டுறவு மேம்பாட்டுக் கழக திருத்த மசோதாவும் மாநிலங்களவையில் இன்று விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

மக்களவையில் சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் முறைப்படுத்துதல் திருத்த மசோதா தாக்கல் செய்யப்பட உள்ளது.

<<<<>>>>

வேலூர் உட்பட நாடு முழுவதும் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்ய பல்வேறு நிலைகளில் குழுக்களை மத்திய அரசு அமைத்துள்ளது.

மக்களவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித் ஷா அளித்த பதிலில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறை சார்ந்த முயற்சிகளை மாநில மாவட்ட அளவில் திறம்பட ஒருங்கிணைக்கவும், செயல்பாடுகளைக் கண்காணிக்கவும் மத்திய கூட்டுறவு அமைச்சகம் தேசிய அளவில் இருந்து மாவட்ட நிலை வரை குழுக்களை அமைத்துள்ளதாக கூறப்பட்டுள்ளது.

கூட்டுறவுத்துறை அமைச்சர் தலைமையில் அமைச்சகங்களுக்கு இடையேயான குழு, துறை செயலாளரின் தலைமையில் தேசிய அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அந்தந்த மாவட்ட ஆட்சியரின் தலைமையில் மேம்பாட்டுக் குழு என 4 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அந்த பதிலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று மக்கள் அனைவரும் வீடுகளில் மூவர்ணக் கொடியை ஏற்ற வேண்டும் என்று உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதவில், ஒவ்வொரு வீட்டிலும் மூவர்ணக்கொ, ஒவ்வொருவர் இதயத்திலும் மூவர்ணக் கொடி என்ற கருத்தினை தாங்கி மக்கள் சுதந்திர தினத்தை போற்றிக் கொண்டாட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நமது சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு இதன்மூலம் நாம் அஞ்சலி செலுத்துவதுடன், வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதற்கு அனைவரும் உறுதியேற்போம் என்று திரு. யோகி ஆதித்யநாத் அதில் கூறியுள்ளார்.

<<<<>>>>

புதுமைக் கண்டுபிடிப்பு, வாடிக்கையாளர்களின் நம்பிக்கையில் தீவிர கவனம் செலுத்தி செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை வங்கிகள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா கேட்டுக்கொண்டுள்ளார்.

மும்பையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், கடன் வழங்குதல், வாடிக்கையாளர் சேவை, செயல்பாட்டுத் திறன், மோசடிகளைக் கண்டறிதல் போன்றவற்றில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வங்கிகளுக்கு மிகப்பெரிய உதவியாக அமைந்துள்ளது என்று கூறினார்.

அதேநேரத்தில் இந்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதில் உள்ள பாதிப்புகளையும் வங்கிகள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று திரு. சஞ்சய் மல்ஹோத்ரா அறிவுறுத்தியுள்ளார்.

<<<<>>>>

கொலம்பியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 200ஐ தாண்டியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் ஏராளமான கட்டிடங்கள் இடிந்து விழுந்த நிலையில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.

Pereira மாகாணத்தில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாகவும், Cali நகரில் 95 பேர் உயிரிந்திருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடிபாடுகளுக்குள் யாரேனும் சிக்கிக்கொண்டிருக்கிறார்களா என மீட்புக் குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர்.

கிரேன் மற்றும் சுரங்கம் தோண்டும் கருவிகளின் உதவியுடன் முழுவீச்சில் மீட்புப் பணிகள் நடைபெறுவதாகவும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

*இதற்கிடையே நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு கொலம்பிய அதிபர் Abelardo De La Espriella நேரில் சென்று, மீட்புப் பணிகளை பார்வையிட்டார்.*

*இதனிடையே கொலம்பிய நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் குடும்பத்திற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*<<<<>>>>*

*ராஜஸ்தான், மேற்குவங்கம் உள்ளிட்ட சில மாநிலங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*ராஜஸ்தானின் கிழக்குப் பகுதி, மேற்குவங்கத்தின் கங்கைக் கரையோர மாவட்டங்கள், மகாராஷ்டிராவின் மத்திய மாவட்டங்கள் மற்றும் ஒடிசா மாநிலங்களில் இன்று கன முதல் மிக கனமழை வரை பெய்யக்கூடும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.*

*இதர வட மாநிலங்களில் ஓரிரு இடங்களில் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.*

*இதனிடையே தமிழகத்தின் மேற்குத்தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் 5 மாவட்டங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.*

*தமிழக கடலோர பகுதிகளில் கீழ்மட்ட வளிமண்டலத்தில் நிலவும் காற்றழுத்த தாழ்வுப் பாதை காரணமாக மாநிலத்தின் பிற மாவட்டங்களிலும், சென்னையிலும் ஓரிரு இடங்களில் லேசான மழைக்கு வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.*

*இதனிடையே கபினி அணையில் இருந்து காவிரியில் விடுவிக்கப்படும் உபரி நீரின் அளவை மத்திய நீர்வள ஆணைய அதிகாரிகள் கண்காணித்து வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.*

*<<<<>>>>*

*துரந்த் கோப்பை கால்பந்து போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*குவஹாத்தியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் FC-1 அணியை 3-1 என்ற கோல் கணக்கில் அந்த அணி வீழ்த்தியது.*

*<<<<>>>>*

*தமிழ்நாடு ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் கோவை அணிக்கு எதிரான ஆட்டத்தில் திருப்பூர் அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.*

*திண்டுக்கல்லில் நடைபெற்று வரும் இப்போட்டியில் முதலில் பேட் செய்த கோவை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 166 ரன் எடுத்தது.*

*இதையடுத்து 167 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய திருப்பூர் அணி 18 ஓவரில் 6 விக்கெட்டை இழந்து இலக்கை எட்டியது.*

*<<<<>>>>*